DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 5/2023**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 13th day of August 2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 1** | கிராமம் | : | ஆலங்குளம் |
| பெயர் | : | குமரவேல் | தாலுகா | : | கீழக்கரை |
| த/பெ. | : | கிழவன் | சமயம் | : | இந்து |
| வயது | : | 62 | ஜாதி | : | தேவேந்திரகுல வேளாளர் |
| தொழில் | : | காண்ட்ராக்டர் | | | |

<u>நாள்: 13.08.2024</u>
<u>நேரம்: 11.35</u>

2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. அவரது தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து காண்ட்ராக்டர் தொழில் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். எனது ஊரை சேர்ந்தவர்கள். 2022ம் வருடம் எங்கள் ஊர் கோவிலில் திருவிழா நடந்தது. அந்த கோவில் சுற்றுச்சுவரில் எங்கள் ஜாதி கொடி பச்சை சிவப்பு அடிக்கப்பட்டிருந்தது. அந்த கோவிலானது அனைத்து சமூகத்தினருக்கும் பொதுவான கோவிலாகும். அதனால் யாரும் ஜாதி கலரை அடிக்ககூடாது என்று பொதுமக்கள் சொன்னார்கள். அதையும் மீறி எதிரிகள் அடித்துவிட்டார்கள். இதை மகளிர் மன்ற கூட்டத்தில் ஜாதி கலர் அடித்ததை பற்றி பேசியுள்ளார்கள். 11.10.2022ம் தேதி காலை 8.00 மணியளவில் நானும், எனது மனைவியும் எங்கள் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தோம். அப்போது எதிரிகள் இருவரும் எனது மனைவியை தேவிடியா, அந்த மகளே, இந்த மகளே என்று அசிங்கமாக பேசினார்கள். அப்போது நான் எதிரிகளிடம் எனது மனைவி யாரிடம் சொன்னார் என்று கேட்டேன். அப்போது எதிரிகள் இருவரும் என்னை பிடித்து கீழே தள்ளிவிட்டார்கள். எனது மனைவி என்னை

தூக்க ஓடிவந்த போது எதிரிகள் இருவரும் எனது மனைவியை கையால் அடித்து மிதித்தார்கள். அப்போது அந்த வழியாக வந்த பாலகங்காதரன், செல்வி, காளியம்மாள் ஆகியோர்கள் ஓடிவந்து விலக்க வந்தார்கள். அதன்பிறகு நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார்மனு நான் கொடுத்தது தான். **அந்த புகார்மனு அ.சா.ஆ.1 ஆகும்**. எனக்கு வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லாததால் நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2024.08.13 17:04:42 +0530

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 5/2023**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 13th day of August 2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 2** | கிராமம் | : | ஆலங்குளம் |
| பெயர் | : | கர்ணபூபதி | தாலுகா | : | கீழக்கரை |
| த/பெ. | : | குமாரவேல் | சமயம் | : | இந்து |
| வயது | : | 55 | ஜாதி | : | தேவேந்திரகுல வேளாளர் |
| தொழில் | : | விவசாயம் | | | |

நாள்: 13.08.2024
நேரம்: 11.45

2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. அவரது தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். எனது ஊரை சேர்ந்தவர்கள். அ.சா.1 எனது கணவர். எங்கள் ஊர் பொதுகோவிலில் ஜாதி பெயிண்ட் அடிக்கப்பட்டிருந்தது. அந்த கோவிலானது அனைத்து சமூகத்தினரும் சேர்ந்து வணங்க கூடிய தெய்வாகும். அதனால் ஜாதி பெயிண்ட் அடிக்கக்கூடாது என்று சொல்லியிருந்தோம். அதன்பிறகு ஒரு மாதத்திற்கு பிறகு சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு ஒருநாள் நானும், எனது கணவரும் எங்கள் வீட்டில் இருந்தோம். அப்போது எதிரிகள் இருவரும் எங்கள் வீட்டிற்கு வந்து ஜாதி பெயிண்ட் நீ ஏன் பேசினாய் என்று என்னிடம் கேட்டார். அப்போது எனது கணவர் ஏப்பா எங்களிடம் தகராறு செய்கிறீர்கள் என்று கேட்டார். நீ என்னடா சப்போட் பண்ணுகிறாய் என்று சொல்லி எதிரிகள் இருவரும் எனது கணவரை அடித்துவிட்டார்கள். அவர் இருதய நோயாளி. நான் போய் விலக்கினேன். என்னையும் இருவரும் அடித்து

விட்டார்கள். பாலகங்காதரன், காளியம்மாள், நாகவள்ளி ஓடிவந்து விலக்கிவிட்டார்கள். அதன்பிறகு நானும், எனது கணவரும் காவல் நிலையம் சென்று சொன்னோம். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2024.08.13 17:04:51 +0530